# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 65/2018** **Date:03.11.2025**

**(DW1)- பவுலோஸ் ராஜன்**

**4** முதல் **8** பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கை வாதி எனக்கெதிராக எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் நாங்கள் அரசிடம் அனு மதி வாங்காமல் கோவிலை கட்டுவதை எதிர்த்து தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து பட்டா நிலமா என்றால் பட்டா நிலம் தான். நான் என்னுடைய முதல் விசாரணையில் புனித அன்னை தெரசா நற்பணி மன்றத்திற்காக வேண்டி சாட்சி சொல்வதாக குறிப்பிட்டுள்ளேன், மேற்படி மன்றத்தில் நான் என்ன பொறுப்பில் உள்ளேன் என்றால் செயலாளராக உள்ளேன். மேற்படி பதிவு செய்யப்பட்ட சங்கமா என்றால் பதிவு செய்யப்பட்ட சங்கம் தான், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

2. நான் தாவா சொத்தில் கட்டிடம் கட்டுவதற்காக கல்லுக்கூட்டம் பேரூராட்சியில் யாரால் அனுமதி வேண்டி மனு செய்யப்பட்டது என்றால் என்னால் மனு கொடுக்கப்பட்டது. நான் எந்த ஆண்டு மனு கொடுத்தேன் என்றால் 2018 ல் மனு கொடுத்தேன். நான் எந்த திருச்சபையை சார்ந்தவர் என்றால் RC சபையை சார்ந்தவர். மேற்படி மன்றத்தை சுற்றி RC , CSI கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். இது வரை தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் எந்த மத கலவரங்களும் இல்லையென்றால் ஏற்படவில்லை.

3. நான் கல்லுக்கூட்டம் பேரூராட்சியிடம் எதற்காக அனுமதி கோரினேன் என்றால் நற்பணி மன்றம் கட்டுவதற்காக அனுமதி கோரினேன். மேற்படி நற்பணி மன்றத்தில் என்ன சேவைகள் யாருக்காக செய்யப்படுகிறது என்றால் ஏழைகளுக்காக சேவை செய்யப்படுகிறது. மேற்படி சேவைகள் சாதி மதம் பார்க்காமல் செய்யப்படுகிறதா என்றால் சாதி மதம் பார்க்காமல் செய்யப்படுகிறது. நற்பணி மன்றம் உள்ள இடத்திற்கும் மண்டைக்காடு ஊருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2.3 கிலோ மீட்டர் இருக்கும் . வாசாஆ. 6 ஆவணம் எப்போது பெறப்பட்டது என்றால் 2024ம் வருடம் பெறப்பட்டது.

4. மேற்படி வாசாஆ,6 அனுமதி வாசாஆ. 7 மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் 4ம் பிரதிவாதியால் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் தற்போது தாவா சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டு திறப்பு விழா நடத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கட்டிடத்தில் தற்போது சமூக சேவை செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் ஏதேனும் முன் விரோதங்கள் உண்டா என்றால் அவ்வாறு ஏதுமில்லை.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

**1.** புனித அன்னை தெரசா நற்பணி மன்றத்தின் பதிவு எண் என்ன என்றால் 1/2017 ஆகும். மேற்படி நற்பணி மன்றத்தின் பதிவு சான்றிதழோ, மேற்படி மன்றத்தின் விதிகளையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ.1 முதல் 9 வரையுள்ள ஆவணங்களில் நான் குறிப்பிடும் பதிவெண் துலங்காது என்றால் சரிதான். 1வது பிரதிவாதி நிறுவனம் ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனமல்ல என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. புனித அன்னை தெரசா நற்பணி மன்றத்திற்கான தீர்மான புத்தகங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து அவ்வாறு எந்த கூட்டமும் நடத்த முடியவில்லை. நற்பணி மன்றத்தின் சார்பாக கூட்டம் நடத்த கூடாது என்று எந்த உத்தரவும் இல்லையென்றால் சரிதான். அவ்வாறு ஒரு நற்பணி மன்றம் இல்லாத காரணத்தினால் தான் நாங்கள் கூட்டம் நடத்தவில்லையென்றால் சரியல்ல. வழிபாடு சம்பந்தப்பட்ட கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்றாலும், சொத்து வாங்க வேண்டும் என்றாலும் கத்தோலிக்க கிறிஸ்தவ நற்பணி மன்றம் என்ற பெயரை வைக்க வேண்டுமென்றாலும் கத்தோலிக்க கிறிஸ்தவ சட்ட விதிகளின் படி ஆயரிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. கன்னியாகுமரி மறை மாவட்ட ஆயர் மற்றும் கோணங்காடு கிளை சர்ச்சிற்கும் தெரியாமலும் அனுமதி பெறாமலும் ஒரு சர்ச் அமைக்க முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு வாதியால் , உடையார் விளை ஊர் சார்பில் பொது நலன் கருதி அனைத்து மக்களுக்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் அவ்வாறு தான் குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கு தாக்கல் செய்த உடன் பொது மக்களுக்கு தெரிய

படுத்தும் விதமாக நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நாளிதழ் மற்றும் நீதிமன்றத்தின் மூலம் முரசு அடித்து அனைவருக்கும் தெரியபடுத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. மேற்சொன்ன நடைமுறைகளை நாளது தேதி வரை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டு தெரிந்து கொண்டேன். இந்த வழக்கில் 9 முதல் 15 வரை கட்சியாக சேர்ந்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விவரம் எனக்கு தெரிந்திருக்கும் பட்சத்தில் வாதியான சுரேஷ் தன்னிச்சையாக செயல்பட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று என்னால் கட்சி செய்ய முடியாது என்றால் சரிதான். வாதி மத ரீதியாக செயல்படுகிறார் என்று எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால் வாதியும் 9 முதல் 15 பிரதிவாதிகளும் இந்து மதத்தை சார்ந்தவர்கள் என்பதால் நான் அவ்வாறு கூறுகிறேன்.

5. நான் மேற்படி கூற்றை அனுமானத்தின் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. CSI கிறிஸ்தவர்களோ அல்லது வேறு RC கிறிஸ்தவர்களோ இந்த வழக்கில் தரப்பினராக சேர வேண்டி மனு தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். வாதியின் கூற்றை அந்த பகுதியில் உள்ள அனைத்து மத மக்களும் ஏற்று கொண்டதால் தான் அவ்வாறான எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் வாதி தன்னிச்சையாகவும், சுய நலத்துடனும் , அரசியலுக்காகவும் வேண்டுமென்று மத சாயம் பூசி வாக்கு வங்கி அரசியல் செய்கிறார் என்று நான் கூறியுள்ளது கற்பனையானதும் வழக்கிற்காக நான் கூறும் பொய் என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி ஊர் மக்கள் சார்பில் குளச்சல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அதில் நானும் மற்ற நிர்வாகிகளும் ஆஜரானோம் என்றால் சரிதான். குளச்சல் காவல்நிலையத்திலிருந்து இரு தரப்பினரையும் பத்மனாபபுரம் சாராட்சியர் முன்பு ஆஜராக சொன்னதன் அடிப்படையில் அங்கும் விசாரணைக்கு ஆஜரானோம் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் பத்மனாபபுரம் சாராட்சியர் எந்த வித அனுமதியின்றி கட்டிடம் கட்ட கூடாது என்று ஒரு உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் முதலில் 11 கான்கீரீட் தூண்கள் அமைத்தவுடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

7. நான் எந்த தேதியில் 4ம் பிரதிவாதியிடம் அனுமதிவேண்டி மனு கொடுத்தேன் என்றால் தேதி நினைவில்லை, கட்டிடம் கட்டுவதற்கு முன்பு கொடுக்கப்பட்டது. மேற்படி அனுமதி கடிதத்தின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அனுமதி கடிதத்தின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி அனுமதி கடிதத்தில் சார் ஆட்சியரின் உத்தரவு பற்றிய விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் சார் ஆட்சியரின் விசாரணைக்கு முன்பே ற மேற்படி அனுமதி கடிதம் கொடுக்கப்பட்டு விட்டது.

8. நான் அவ்வாறு எந்த அனுமதி கடிதமும் கொடுக்கவில்லையென்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் அனுமதி கடிதம் கொடுத்த போது மேற்படி கடிதத்தோடு வரைபடம் மற்றும் வரைபட கட்டணம் செலுத்தியிருந்தேனா என்றால் மேற்படி கட்டணம் இடத்தை பார்வையிட்டு அளவீடு செய்த பின்பு கோருவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர். நான் எந்த அனுமதியும் கோரவில்லையென்றாலும் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்ட முடியாது என்றாலும் சரியல்ல.

9. நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ. 5 ஆவணத்திலும் சார் ஆட்சியரின் உத்தரவு பற்றியும், இந்த வழக்கு நிலுவையில் உள்ளது பற்றியும் குறிப்பிடவில்லையென்றால் சரிதான், மேற்படி மனு அனுமதி கடிதம் மட்டுமே, அதில் மேற்படி விவரத்தை குறிப்பிட தேவையில்லை. இந்த வழக்கு நிலுவையில் உள்ளது பற்றியும் சார் ஆட்சியரின் உத்தரவையும் மறைத்து நான் அனுமதி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல, உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. உயர் நீதிமன்ற உத்தரவு பிறப்பித்த பின்பு தான் பிவாசாஆ. 5 அனுமதி கடிதத்தை நான் 4ம் பிரதிவாதியிடம் சமர்ப்பித்தேனா என்றால் அதன் பின்பு தான் சமர்பித்தேன்.

10. முதல் அனுமதி கடிதம் கொடுத்த பின்பும், இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பும் உயர் நீதிமன்ற உத்தரவிற்கு முன்பு நான் எந்த மனுவும் 4ம் பிரதிவாதியிடம் கொடுக்கவில்லையென்றால் சரிதான். உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவிலும் இந்த வழக்கு பற்றியும் சார் ஆட்சியரின் உத்தரவு பற்றியும் நான் தெரிவிக்கவில்லையென்றால் தெரிவிக்கவில்லை, வழக்கு அனுமதி பெறாமல் கட்டிடம் கட்ட கூடாது என்ற காரணத்தினால் அதை குறிப்பிடவில்லை. இந்த வழக்கு மற்றும் சார் ஆட்சியரின் உத்தரவிற்கு எதிராக பொய்யாக ஒரு உத்தரவை பெற

உயர்நீதிமன்றத்தில் பொய்யான சங்கதிகளை கூறி மனுவை தாக்கல் செய்து உத்தரவை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

11. 4ம் பிரதிவாதி அனுமதி தரவில்லையென்று 4ம் பிரதிவாதியின் மேல் அதிகாரிகளுக்கு எந்த தேதியிலும் எந்த புகாரும் கொடுக்கவில்லையென்றால் சரிதான், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததால் கொடுக்கவில்லை. உயர்நீதிமன்ற உத்தரவில் எனக்கு கட்டிடம் கட்ட அனுமதி வழங்க வேண்டுமென்ற எந்த உத்தரவுமில்லையென்றால் சரிதான். நான் 4ம் பிரதிவாதியை கையகப்படுத்தி மோசடியாக ஒரு அனுமதியை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது பொய்யான சங்கதிகளை கூறி மோசடியாக ஒரு அனுமதியை பெற்று கட்டப்பட்ட கட்டிடம் சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல.

12. மேற்படி கட்டிடத்திற்கு வீட்டு வரி கட்டியுள்ளேனா என்றால் கட்டியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ. 2,3,4 ஆவணங்கள் வழக்கிற்கு முந்தைய ஆவணங்கள் என்றால் சரிதான், தற்போது உள்ளதும் என்னிடம் உள்ளது. இந்த வழக்கில் தேவையான நபர்களை கட்சி சேர்க்கவில்லையென்று குறிப்பிட்டுள்ளது எந்த நபர்களை என்றால் ஊரில் உள்ள அனைவரையும் கட்சி சேர்க்கவில்லை. வழக்கு பட்டிகை சொத்திற்கு மேற்கு புறத்தில் சுமார் 150 அடி துாரத்தில் சி எஸ் ஐ கிறிஸ்தவ ஆலயம் உள்ளது என்றால் சரிதான். அதே போல் வழக்கு பட்டிகை சொத்தில் தெற்கு சுமார்300 முதல் 350 அடி துாரத்தில் இசக்கியம்மன் கோவில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

13. வழக்கு பட்டிகை சொத்திலிருந்து வடகிழக்கு திசையில் சுமார் 500 அடி துாரத்தில் கொப்புளான் விளை இசக்கியம்மன் ஆலயம் உள்ளது என்றால் அவ்வாறு கோவில் இல்லை. வழக்கு பட்டிகை சொத்திற்கு சுமார் 300 அடி வடக்காக RC குருசடி உள்ளது என்றால் சரிதான். என்னுடைய ஊர் காட்டுவிளையா என்றால் என்னுடைய வீடு காட்டுவிளையில் உள்ளது. இந்த வழக்கு உடையார் விளை ஊர் சம்பந்தப்பட்ட விஷயம் என்றாலும் எனக்கும் உடையார் விளை ஊருக்கும் எந்த சம்பந்தமுமில்லையென்றாலும் சரியல்ல, என்னுடைய ஊரும் உடையார் விளையாகும்.

14. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் மத ஒற்றுமையை பேணி காப்பது எங்களது சங்கத்தின் குறிக்கோள் என்று குறிப்பிட்டுள்ளேன், எந்த மதத்தின் ஒற்றுமை என்றால் அனைத்து மதத்தின் ஒற்றுமை என்று குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு ஒற்றுமையை பேணி காப்பது எங்களது சங்கத்தின் குறிக்கோளாக இருந்தால்

கத்தோலிக்க நற்பணி மன்றம் என்று பெயர் வைத்திருக்க மாட்டோம் என்றால் சரியல்ல, நாங்கள் ஆர் சி கிறிஸ்தவர்கள் என்பதால் அவ்வாறு பெயர் வைத்துள்ளோம். வாதி சமய ஒற்றுமையை கெடுக்க வேண்டும் என்றும் என் மீதுள்ள முன் விரோதத்தின் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுளேன், வாதிக்கும எனக்கும என்ன முன் விரோதம் என்றால் எந்த முன் விரோதமுமில்லை.

15 வழக்கு பட்டிகை சொத்து கட்டிடம் வணிக வளாகமாக செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளேன், என்ன வணிகம் நடைபெற்று வருகிறது என்றால் தற்போது வழக்கு நிலுவையில் உள்ளதால் வாடகைக்கு விடவில்லை. மேற்படி கட்டிடத்தை வாடகைக்கு விடுவதாக தீர்மானித்துள்ளீர்களா என்றால் கேட்டால் கொடுக்கலாம். நான் எந்த காலக்கட்டத்திலும் வழக்கு பட்டிகை சொத்து கட்டிடத்தில் எந்த காலத்திலும் எந்த வித மத சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளோ வழிபாடுகளோ மேற்கொள்ள மாட்டோம் என்றால் நான் நிரந்தரமாக பொறுப்பில் இருக்க மாட்டேன், அதனால் என்னால் அது பற்றி கூற முடியாது.

16. எதிர்காலத்தில் மேற்படி கட்டிடத்தை மத வழிபாட்டு தலமாக மாற்ற வாய்ப்புள்ளதா என்றால் அரசு அனுமதி பெற்றால் மாற்றலாம். வழக்கு பட்டிகை சொத்து கட்டிடத்தை தற்போது வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினால் வணிக வளாகம் என்று அனுமதி பெற்று விட்டு பின்பு வழி பாட்டு தலமாக மாற்ற முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து கட்டிடம் வணிக வளாகம் என்று நான் கட்சி செய்வதால் மேற்படி கட்டிடத்தில் அனுமதி பெறாமல் வழி பாட்டு தலமாக மாற்றுவதில் தடை உத்தரவு வழங்குவதில் எனக்கு எந்த ஆட்சேபணையுமில்லையென்றால் சரிதான், எந்த ஆட்சேபணையுமில்லை.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்